20.03.2025 MCOP No.23/2020

சாட்சி : PW 1 ராசாத்தி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை தொடர்ச்சி:**

எனது தரப்பில் மேற்கொண்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. எனவே மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை:**

1. விபத்து நடந்தது மாலையா இரவா என்று எனக்குத் தெரியுமா என்றால் தெரியும் இரவு 08.30 மணியவில் நடந்தது. விபத்து நடந்த இடத்தில் வேகத்தடை உள்ளது என்றால் சரிதான். அந்த ரோடு அகலமான ரோடு என்றால் சரிதான். அந்த விபத்து நடப்பதற்கு முன்பு பேருந்தின் உள்ளே நானும் எனது கணவரும் இருந்தோம் என்றால் சரிதான். பேருந்து சமத்துவப்புரம் பஸ்டாப்பில் நின்றபோது நான் இறங்கிவிட்டேன் என்றால் சரிதான். பேருந்தில் இருந்து பயனிகள் இறங்கியபின்பு நடத்துனர் சமிக்கை செய்த பின்புதான் பேருந்து கிளம்புவது என்றால் சரிதான்.

2. நான் இறங்கிய பின்பு யாரும் இறங்காத காரணத்தினால் பேருந்து மெல்ல ஓட்டிச் செல்லப்பட்டது என்றால் இல்லை எனது கணவர் இறங்கிகொண்டிருக்கும் போதே விசில் அடிக்கப்பட்டு பேருந்து கிளப்பப்பட்டது. எனது கணவர் அடிபட்டது சம்மந்தமாக நான் தான் தேவகோட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி புகாரில் நான் பேருந்து நிறுத்தம் வந்ததும் பேருந்து நின்றதும் நான் இறங்கிவிட்டேன் எனது கணவர் சுந்தரம் இறங்கவில்லை நான் இறங்கச் சொல்லி கத்தினேன். ஆனால் பேருந்து புறப்பட்டுவிட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. இந்த விபத்து ஏற்பட்டதற்கு எனது கணவர்தான் முழுக் காரணம் என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் சமையல் காண்டிராக்டராக விஜயமங்கலம் சக்தி மெஸ் ல் வேலை பார்த்து வருவதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் என்னால் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

3. வாரிசுகள் அனைவரும் மேஜராகிவிட்டார்கள் என்றால் சரிதான். நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை அதிகமானது என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு எனது கணவர்தான் காரணம் என்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்குத் தெரியாது.

**மறுவிசாரணை:** இல்லை

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)– திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.